


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 340 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 04 – ஞாயிற்றுக்கிழமை 20 ஜூலை 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 340 : Thiruvalluvar Year - 2056 - Aadi 04 - Sunday 20 July 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த மகன்

# மு.க.முத்து உடல் நலக் குறைவால் மறைவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2025), தனது சகோதரர் மு.க.முத்து அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைவெய்தியதையடுத்து, சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இயக்குனர் அமிர்தம், மு.க.தமிழரசு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்ணீர் அஞ்சலி!

**சென்னை, ஜூலை 20-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் மகனான மு.க.முத்து அவர்கள், நேற்று (19.7.2025) காலை 8.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க 'முரசொலி' பெரிதும் வருந்துகிறது.**

**தமது அண்ணன் மு.க.முத்து மறைவுற்றார் எனும் செய்தியறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகுந்த துயருற்றார்.**

**சென்னை - ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மு.க.முத்து அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.**

**மு.க.முத்து அவர்களின் உடலை, சென்னை, கோபால புரத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இல்லத்திற்குக் கொண்டு வந்து வைத்து - பொதுமக்கள், கழகத்தினர் அஞ்சலி செலுத்திட ஏற்பாடு செய்தார்.**

**கோபாலபுரம் இல்லத்தில் - மு.க.முத்து அவர்களின் திருவுடலுக்கு அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பல்வேறு துறைகளையும் சார்ந்த பெருமக்கள் பலரும் அஞ்சலி செலுத்தினார்கள்.**

**கழகத்தினர் - பொதுமக்களின் கண்ணீர் அஞ்சலி செலுத்தியதை அடுத்து, நேற்று மாலை 5.00 மணி யளவில், மு.க.முத்து அவர்களின் திருவுடல் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, பெசன்ட் நகர் மின் மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் மகன் மு.க.முத்து 1948ஆம் ஆண்டு சனவரி திங்கள் 14ஆம் நாள் பிறந்த அவருக்கு வயது 77.

பேரறிஞர் அண்ணா அவர்களால் 'இசைச்சித்தர்' எனப் போற்றப்பட்ட சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் அருமைத் தங்கை பத்மா. அவரைத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலில் திருமணம் செய்து கொண்டார். 1944ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் - பத்மா ஆகியோரின் இல்லறத்தின் பயனாக 14.1.1948 அன்று பிறந்த குழந்தைதான் மு.க.முத்து. அவர் பிறந்தவுடனேயே தாய் பத்மா அவர்கள் மறைந்ததால், தாயின் ஆதரவை குழந்தைப் பருவத்திலேயே இழந்தவர் மு.க.முத்து.

தாய் பத்மா உயிர் துறப்பதற்கு முன்பாக, கணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம், "என் குழந்தைக்கு மாமா பெயரைச் சூட்டுங்கள்" என்று கூறியதற்கு ஏற்ப கலைஞர் அவர்களின் தந்தையார் முத்துவேலர் நினைவாக 'மு.க.முத்து' எனப் பெயர் சூட்டப்பட்டது.

### பன்முகத் தன்மைக்கொண்டவர்!

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. பேரறிஞர் அண்ணா அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரக் குழு உறுப்பினாராக நியமிக் கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழக வளர்ச்சிக்காக தமிழ்நாடு முழுவதும் சூறாவளிப் பிரச் சாரம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் காரணமாக, குழந்தைப் பருவத்திலேயே தாய் பத்மா அவர்களை இழந்த நிலையில், தந்தை கலைஞர் அவர்களின் முழு கவனிப்பும் கிடைக்கப் பெறாத குழந்தையாக பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தார் மு.க.முத்து.

கல்வியும், இசைத் திறனும் பெற்று, அறிவும் ஆற்றலும் மிக்கவராக வளர்ந்த மு.க.முத்து அவர்கள், இயற்கையிலேயே நல்ல குரல்வளம் வாய்க்கப் பெற்றிருந்தார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் போல் வேடம் அணிந்து கொண்டு முதலில் கழகப் பிரச்சார நாடகங்களில் நடித்து வந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை வசனம் எழுதிய 'பிள்ளையோ பிள்ளை' என்னும் திரைப் படத்தின் வாயிலாக, முதலில் திரை உலகில் தோன்றினார். சமையல்காரன், அணையா விளக்கு, பூக்காரி, இங்கேயும் மனிதர்கள், நம்பிக்கை நட்சத் திரம், எல்லாம் அவளே முதலிய திரைப்படங்களில் நடித்துப் புகழ் பெற்றார்.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## சத்தீஸ்கர் முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகேலின் மகன் கைது!

# எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் தந்திரம்!

## பிரியங்கா காந்தி கண்டனம்!

*புதுடெல்லி, ஜூலை 20 -*

*சத்தீஸ்கர் முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகேலின் மகன் சைதன்யா பாகேலை அமலாக்கத் துறை கைது செய்ததற்கு காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி ஒன்றிய அரசை விமர்சித் துள்ளார். இந்த நடவ டிக்கை, மக்களின் குரலை நசுக்கும் என்றும், எதிர்க்கட்சி களை ஒடுக்கும் தந்திரம் என்றும் அவர் குற்றஞ் சாட் டினார்.*



*இதுகுறித்து பிரியங்கா காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,*

*"பா.ஜ.க. அரசு சத்தீஸ் கரின் அனைத்து காடுகளை யும் அதானிக்கு அர்ப்பணித் துள்ளது. காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின் றன, PESA சட்டம் மற்றும் NGT உத்தரவுகள் அப்பட்ட மாக மீறப்படுகின்றன. முன் னாள் முதல்வர் பூபேஷ் பாகேல் இந்த பிரச்சினையை சட்டப்பேரவையில் எழுப்பவிருந்தார்.*

*இதை தடுக்கவே, அமலாக்கத்துறை அதிகா லையில் அவரது வீட்டை சோதனை செய்து அவரது மகனைக் கைது செய்தது.*

*கடந்த 11 ஆண்டுகளில், இது போன்ற நடவடிக்கை கள் மக்களின் குரலை நசுக் கவும், எதிர்க்கட்சிகளை ஒடுக்கவும் பயன்படுத்தப் படும் தந்திரங்கள் என்பதை நாடு தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது. ஆனால் இதுபோன்ற தந்திரங்களால் உண்மையை அடக்கவோ அல்லது எதிர்க்கட்சிகளை மிரட்டவோ முடியாது.*

*ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டரும் பூபேஷ் பாகேலுடன் உறுதியாக நிற்கிறார்" என்று தெரிவித் துள்ளார்*

*முன்னதாக, சத்தீஸ்கர் அரசு நடத்தும் மதுபானக் கடைகளில் ரூ.3,200 கோடி அளவுக்கு ஊழல் நடை பெற்றதாக எழுந்த குற்றச் சாட்டில், முன்னாள் முதல் வர் பூபேஷ் பாகேலின் மகன் சைதன்யா பாகேல் நேற்று முன்தினம் அமலாக்கத் துறையால் கைது செய்யப் பட்டார். சத்தீஸ்கர் முழு வதும் 750க்கும் மேற்பட்ட மதுக்கடைகளை மாநில அரசு நடத்தி வருகிறது. இதற்காக தனியார் நிறு வனங்களிடம் இருந்து மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.*

*முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகேல் தலைமை யிலான காங்கிரஸ் ஆட்சி யின்போது மதுபானங் களை கொள்முதல் செய்த தில் மிகப்பெரிய அளவில் ஊழல் நடைபெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது.*

*கடந்த 2023ம் ஆண்டு டிசம்பரில் சத்தீஸ்கரில் விஷ்ணு தியோ சாய் தலை மையிலான பா.ஜ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. இதன்பிறகு மதுபான ஊழல் குறித்த விசாரணை தீவிரப்படுத்தப்பட்டது. மாநில பொருளாதார குற்றப்பிரிவு வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தியது.*

*இதன் தொடர்ச்சியாக சத்தீஸ்கரின் துர்க் மாவட் டம், பிலாய் நகரில் உள்ள முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகேல் வீட்டில் அமலாக் கத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடத்தினர். அப்போது பூபேஷ் பாகேலின் மகன் சைதன்யா பாகேல் கைது செய்யப்பட்டார்.*

*இதன்பிறகு ராய்ப்பூர் நீதிமன்றத்தில் அவர் ஆஜர் படுத்தப்பட்டார். அவரை 5 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.*

## 5 ஜெட் விமானங்கள் குறித்து ட்ரம்ப் பேச்சு!

# நாடாளுமன்றத்தில் பிரதமர் பதிலளிக்க வேண்டும்!

## காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 20 –

இந்தியா பாகிஸ்தான் போரின்போது அமெரிக்கா 5 ஜெட் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ள நிலையில், இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் சமூக ஊடக தளமான எக்ஸ் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒரு பதிவில், இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான போரில் 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதோடு, வர்த்தகத்தை முன்நிறுத்தி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையி லான போரை நிறுத்தியதாக 24வது முறை யாகக் கூறியுள்ளார். ட்ரம்ப் இப்படி தொடர்ந்து சொல்லி வருகிறார், ஆனால் நரேந்திர மோடி அமைதியாக இருக்கிறார். வர்த்தகத்திற்காக நாட்டின் மரியாதையை நரேந்திர மோடி ஏன் சமரசம் செய்தார்? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள பதிவில், "நாடாளுமன்றக் கூட்டத் தொடர் கூட இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் ட்ரம்ப் ஏவு கணை 24வது முறையாக ஏவப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடக்க இருந்த அணு ஆயுதப் போரை தடுத்து நிறுத்தியதாக டொனால்ட் ட்ரம்ப் கூறி இருக்கிறார்.

மேலும், போர் தொடர்ந்தால் இரு நாடுகளுடனும் வர்த்தகம் இருக்காது. அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினால் போர் நிறுத்தத்துக்கு உடனடியாக ஒப்புக்கொள்ள வேண்டும் என தான் வலியுறுத்தியதாகவும் கூறி இருக்கிறார்.

ட்ரம்ப் வெளியிட்டுள்ள பரபரப்பான புதிய விஷயம் என்னவென்றால், 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என கூறி இருப்பது.

கடந்த 2019 செம்படம்பரில் அமெரிக்கா வில் நடந்த ஹவுடி மோடி நிகழ்ச்சி, 2020 பிப்ரவரியில் நடந்த நமஸ்தே ட்ரம்ப் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் டொனால்ட் ட்ரம்ப் உடன் பல ஆண்டுகளாக நட்பையும் அரவணைப்பை யும் பெற்று வருபவர் பிரதமர் மோடி.

எனவே, கடந்த 70 நாட்களாக ட்ரம்ப் என்ன கூறி வருகிறார் என்பது குறித்து பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஒரு அறிக்கையை வெளியிட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் குடும்பத்தின் மூத்த பிள்ளை –

# என்னுயிர் அண்ணன் மு.க.முத்து!

## மறைவுக்கு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, ஜூலை 20 -**

**"கலைஞர் குடும்பத்தின் மூத்த பிள்ளை, என்னுயிர் அண்ணன் தாய் - தந்தையர்க்கு இணையாக என் மீது பாசம் காட்டியவர் மு.க.முத்து அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

மு.க.முத்து அவர்கள் மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் குடும்பத்தின் மூத்த பிள்ளை, என்னுயிர் அண்ணன் மு.க.முத்து அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி இன்று காலையில் என்னை இடி யெனத் தாக்கியது. தாய் தந்தையர்க்கு இணையாக என் மீது பாசம் காட்டிய அன்பு அண்ணனை இழந்து விட்டேன் என்ற துயரம் என்னை வதைக்கிறது.

தந்தை முத்துவேலர் நினைவாக அண்ணனுக்கு 'மு.க.முத்து' என்று பெயர் சூட்டினார் தலைவர் கலைஞர் அவர்கள். தலைவர் கலைஞரைப் போலவே இளமைக் காலம் முதல் நாடகங்களின் மூலமாகத் திராவிட இயக்கத்துக்கு



தொண்டாற்றத் தொடங்கியவர் அண்ணன் முத்து அவர்கள்.

நடிப்பிலும், வசன உச்சரிப்பிலும், உடல் மொழியிலும் தனக்கெனத் தனிப் பாணியை வைத்திருந்தார். அத்தகைய ஆற்றல், ஆர்வம் காரணமாக திரைத் துறையில் 1970ஆம் ஆண்டில் நுழைந் தார். அறிமுகமான முதல் திரைப்படத்தி லேயே இரட்டை வேடத்தில் நடித்தார்.

பிள்ளையோ பிள்ளை, பூக்காரி, சமையல்காரன், அணையா விளக்கு ஆகிய படங்களின் மூலமாகத் தமிழ்நாட்டு இரசிகர் மனதில் நிரந்தரமாகக் குடியேறி னார் அண்ணன் மு.க.முத்து அவர்கள்.

பல நடிகர்களுக்கு வாய்க்காத சிறப்பு அவருக்கு இருந்தது. தனது சொந்தக் குரலில் பாடல்களை இனிமையாகப் பாடும் திறனைப் பெற்றிருந்தார். 'நல்ல மனதில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா' என்ற பாடலும், 'சொந்தக்காரங்க எனக்கு ரொம்ப பேருங்க' என்ற பாடலும் பலராலும் இன்றும் மறக்க முடியாத பாடல் ஆகும்.

என் மீது எப்போதும் பாசத்துடன் இருந்து, எனது வளர்ச்சியைத் தன் வளர்ச்சியாகக் கருதி, எப்போதும் என்னை ஊக்கப்படுத்தி வந்தவர் அவர். எப்போது அவரைப் பார்க்கச் சென்றாலும், பாசத்துடன் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதை வழக்கமாக வைத் திருந்தார். வயது மூப்பின் காரணமாக அவர் மறைவுற்றாலும் அன்பால் எங்கள் மனதிலும், கலையாலும் பாடல்களாலும் மக்கள் மனதிலும் என்றும் வாழ்வார் அண்ணன் மு.க.முத்து அவர்கள். என் ஆருயிர் அண்ணனுக்கு அன்பு உணர்வுடன் எனது அஞ்சலியை நான் செலுத்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.